DVC No. 1/2018 Dated: 24.10.2018

RW1 Chellaiah – குறுக்குவிசாரணை

.மனுதார் எனது மனைவி, மகள் என்றால் சரிதான். என்னுடன் எனது தம்பியும் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது தம்பியும் திருமணமாகி மனைவியை பிரிந்து வருகிறார் என்றால் சரிதான். எனது தங்கையை உள்ளூரில் திருமணமாகி உள்ளதால் அடிக்கடி என் வீடடிற்கு வந்து செல்வார் என்றால் அவ்வாறில்லை எப்போதாவது வருவார். எனது மனைவிக்கு வளைகாப்பு நடக்கவில்லைஎன்று சொன்னால் என்னுடன் 54 நாட்கள் மட்டும் என் மனைவி சேர்ந்து வாழ்ந்து அதன்பின்பு அவரது பெற்றோர் வீடடிற்கு சென்றுவிட்டதால் வளைகாப்பு நிகழ்ச்சிக்கு வாய்ப்பு எழவில்லை. எனது மகனின் பெயர் சூட்டு விழாவிற்கு கலந்துகொள்ளவில்லைஎன்றால் குழந்தை பிறந்ததும் நான் சென்று மருத்துவமனை் சென்றபோது என்னை குழந்தையை பார்க்க அனுமதிக்கவில்லை அதனால் பெயர் சூட்டு விழா நடைபெற்றது எனக்கு தெரியாது. இந்த விபரத்தை நான் எனது எதிருரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் மகளிர் காவல்நிலையத்தில் விசாரணையின்போது கூறியுள்ளேன். இதுநாள்வரை ஒருதடவை கூட எனது மகளை நான் தொட்டு தூக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த நீதிமன்ற உத்தரவு காலத்திற்கு முன்ப வரை எவ்விதமான தொகையையோ எனது மனைவிக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் இந்த மனுவில் நான் கொடுத்து வருகிறேன் மனு தாக்கல செய்யும் முன்பு நான் தொகை கொடுத்தபோது எனது மனைவி அதனை வாங்க மறுத்துவிட்டார். அந்த விபரத்தையும் எனது எதிருரையில் கூறவில்லை என்று சொன்னால சரிதான். எங்களது திருமணத்தின்போது எனக்கு வயது 45 என்றாலும், எனது மனைவிக்கு 32 வயது என்றாலும் சரிதான். அதனால் கஷ்டப்பட்ட குடும்பத்தில் போட்ட நகை போதும் என்று 1ம் எதிர்மனுதாரரை திருமணம் முடித்தேன் என்று சொன்னால் சரிதான். மனுதாரின் வீட்டில் யாருக்கும் வருமானம் கிடையாது என்று சொன்னால் 1ம் மனுதாரின் அப்பா வேலை பார்தது வருகிறார் 1ம் மனுதாரும் அவரது



தாயாரும் பீடி சுற்றி அதன்மூலம் வருமானம் ஈட்டி வருகிறார்கள். நான் மதுரா கோட்ஸ் மில்லில் 1991ல் வேலை பார்த்துவருகிறேன் என்று சொன்னால சரிதான். மில்லில் வெப்ராசஸ் பிளீசில்

டையர் வேலை பார்த்து வருகிறேன். என்னுடைய டிக்கெட் எண்.16663 என்று சொன்னால் டிக்கெட் எண்.16633 ஆகும். மதுரா கோட்ஸ் மில்லில் நிரந்தர தொழிலாளர்களுக்கு ம்டடுமே டிக்கெட் கொடுப்பது வழக்கம் என்று சொன்னால் ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் டிக்கெட் கொடுப்பார்கள். நான் யாருடைய கான்ட்ராக்டடில் வேலை செய்கிறேன் என்று சொன்னால் நான் மதுரா கோட்ஸ் மில்லில் வேலை பார்க்கிறேன். என்னுடைய சம்பள சீட்டை நீதிமனறத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் மாதத்திற்கு ரூ.25,000க்கு குறையாமல் சம்பளம் பெற்று வருகிறேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு தீபாவளி போனஸ் உண்டு என்றால் சரிதான். போனஸ் ஒரு வருடத்திற்கு ரூ.50,000 என்று சொன்னால் சரியல்ல. போன வருடம் எவ்வளவு தொகை போனசாக நான் வாங்கினேன் என்றால் 15000 வாங்கினேன். நான் குடியிருக்கும் கதவு எண்.19/45க்கான தீர்வை ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் வீட்டின் உரிமையாளர் பெயரில் உள்ளது நான் அந்த வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். விகேபுரம் நகராடசிக்கு நான் வீடடு வரி செலுத்தவில்லை என்றாலும், எனது அப்பாவின் பெயரில் வீட்டுவரி செலுத்தவில்லை என்று சொன்னாலும் சரிதான். எனது பெற்றோருக்கு சொந்த வீடு எதுவும் இல்லைஎன்று சொன்னால் சரிதான். இரும்பு பாலத்திற்கு அருகே எனக்கு நஞ்சை நிலம் சொந்தமாக கிடையாது என்று சொன்னால் சரிதான். எனது தம்பி ஒத்திக்கு நிலம் வாங்கியுள்ளான் அதை நான் பார்க்க செல்வேன். அதில் வரும் வருமானத்தை நானும் எனது தம்பியும் அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் எனது தம்பி ம்டடுமே அனுபவித்து வருகிறார். முதலிரவு அன்றே 1ம் மனுதார் மனநிலை பாதிப்புடையவர் போல் நடந்த கொண்டதாக சொன்னதை சமுதாயத்திலோ, வேறு யாரிடமாவது சொன்னேனா என்றால்



எனது பெற்றோரிடம் மட்டுமே கூறியுள்ளேன். எனது சமுதாயத்திலும் மனு எதுவும் கொடுத்தேனா என்றால் மனுதார் தரப்பில் கொடுத்துள்ளார். அந்த மனு விசாரணையில் நான் ஆஜராகி நடந்த சம்பவத்தை பற்றி கூறியுள்ளேன். இந்த விபரத்தையும் நான் எனது எதிருரையில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. நான் 1ம் மனுதாரின் மனநிலை பாதிப்பு குறித்து மருத்துவ சிக்சை மேற்கொண்டேனா என்றால் இல்லை. 1ம் மனுதார் மனநிலை பாதிப்புடையவர் என்று சொல்வது பொய் என்றாலும், நான் 1ம் மனுதரிடம் பைக் கேட்டதாகவும் நானும், எனது தம்பியும் ஒன்றாக குடியிருந்துவருவதால் 1ம் மனுதாரை கொடுமைப்படுத்தி

வந்தோம் என்று சொன்னால் அவ்வாறில்லை. மனுதார்கள் எவ்வித வருமானமும் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வருவதாகவும் நான் மனுதாருக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவா் என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மா கைகால் வீக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் திருமணம் செய்த மனைவியையும் பெற்ற மகளையும் பராமரிக்கமல் இருந்து வருவதாகவும், நான் சட்டப்படி அவர்களை பராமரிக்க கடமைப்பட்டவன் என்று சொன்னால் சரியல்ல. மனுதார்கள் தங்களுடைய வாழ்க்கைக்கு தேவையான அடிப்படை தேவைகளை நிறைவேற்ற முடியாமல் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார்கள் என்று சென்னால் சரியல்ல. நான் மனுதார்களுக்கு எவ்வித உதவியும் செய்யக்கூடாது என்பதற்காக நான் கான்ட்டராக்ட்டில் வேலை செய்து வருவதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது எதிருரையில் கூறாத சங்கதிகளை தற்போது சாட்சியாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>